டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

agridoctor.in | 24.10.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 105 | Madurai | Online Edition

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

# பித்தோராகர் பகுதியில் மீன் வளர்ப்புத் திட்டங்களை ஆய்வு செய்த மத்திய மீன்வளத் துறைச் செயலாளர்

புது தில்லி, அக்23

மத்திய அரசின் மீன்வளத் துறைச் செயலாளர் அபிலக்ஷ் லிக்கி, உத்தராகண்ட் மாநிலம் பித்தோராகரில் கடந்த 19ம் தேதியில், பித்தோராகர் குளிர்நீர் மீன்வளக் குழுமம் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

இமயமலைப் பகுதியில் உள்ள குளிர்நீர் மீன்வளத்தின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். இந்திய அரசு நாடு முழுவதும் 34 மீன்வளக் குழுமங்களையும், பித்தோராகரில் ஒரு குளிர்நீர் மீன்வளக் குழுமத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

சந்தை இணைப்புகளை வலுப்படுத்துதல், மீன்களின் மதிப்புக் கூட்டலை ஊக்குவித்தல், மீன் உற்பத்தியாளர்களுக்கு சிறந்த விலையை உறுதி செய்தல் ஆகியவற்றின் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

ஆய்வின் போது, பித்தோராகர் மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ் குமார் பட்கைன், மாவட்டத்தில் மீன்வளத் துறையில் எட்டப்பட்ட சாதனைகளின் ஒரு கண்ணோட்டத்தை வழங்கினார்.



## ஆராய்ச்சியை வலுப்படுத்த

# திருச்சி வாழை ஆராய்ச்சி மையம் மற்றும் வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்



திருச்சி, அக்.23

திருச்சிராப்பள்ளியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வாழை ஆராய்ச்சி மையம் மற்றும் வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சென்னை (விஐடி) இணைந்து, வாழை ஆராய்ச்சி மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் கூட்டு ஆராய்ச்சி, மாணவர் பங்கேற்பு மற்றும் ஆசிரியர் பரிமாற்றத்தை ஊக்கு விப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், வாழை ஆராய்ச்சியில் வாழை ஆராய்ச்சி மைய கொண்டுள்ள நிபுணத் துவத்தையும், உயிரி–அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை களில் விஐடி, சென்னை கொண்டுள்ள வலிமையையும் ஒருங் கிணைத்து, பல்துறை சார்ந்த ஆராய்ச்சியை மேம்படுத்துவதாகும். இந்த ஒப்பந்தம் மூலம் குறிப்பிட்ட திட்டங்களின் அடிப்படையில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல், மாணவர்களின் ஆராய்ச்சிப் பங்கேற்பை ஊக்குவித்தல் மற்றும் இரு நிறுவனங் களுக்கிடையே அறிவியல் அறிவு மற்றும் நிபுணத்துவப் பரிமாற்றத்தை மேம்படுத்துதல் ஆகியவை முக்கிய நோக்கம் ஆகும்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வாழை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் டாக்டர் ஆர்.செல்வராஜன், வளர்ந்து வரும் ஆராய்ச்சிச் சவால்களை எதிர்கொள்வதற்கும், வாழைத் துறைக்கான புதுமை யான தொழில்நுட்பத் தீர்வுகளை உருவாக்குவதற்கும் நிறுவனங் களுக்கிடையேயான ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என வலியுறுத்தினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வாழையில் பூச்சி மற்றும் நோய்களைக் கண்டறிதல் மற்றும் முன்கூட்டியே எச்சரிக்கை வழங்குவதற்கான செயற்கை நுண்ணறிவு சார்ந்த தொழில் நுட்பங்கள், பாசன மேலாண்மை, மண் ஆரோக்கியம் மற்றும் உர அளவைக் கணக்கிடுவதற்கான உணரிகள், வாழை சாகுபடி மற்றும் ஊடுபயிர் பராமரிப்புப் பணிகளில் உடல் உழைப்பைக் குறைக்கும் கருவிகள் ஆகியவை தற்போதைய முக்கிய ஆராய்ச்சிப் பகுதிகளாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், அறிவியல் ஆராய்ச்சியின் முடிவுகளை நடைமுறைப் பயன்பாடுகளாக மாற்றி, விவசாயிகள் மற்றும் பிற பங்குதாரர் களுக்குப் பயனளிப்பதில் பல்துறை கூட்டுமுயற்சிக்கு முக்கியப் பங்கு இருப்பதாக அவர் தெரிவித்தார். தமிழ்நாட்டில் ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் ட்ரோன்கள் மற்றும் செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தி வாழைப்பயிர்களின் பரவலை வரைபடமாக்க இரு நிறுவனங்களும் இணைந்து திட்டமிட்டுள்ளனர்.

விஐடி, சென்னை இணைவேந்தர் டாக்டர் டி.தியாகராஜன், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பு புதுமைகளை ஊக்குவித்தல், ஆராய்ச்சித் திறன்களை வலுப்படுத்துதல் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்களுக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது என எடுத்துரைத்தார். வாழையை அடிப்படையாகக் கொண்ட சுழற்சிப் பொருளாதாரம் மற்றும் வாழை கழிவுகளை கொண்டு மதிப்புக்கூட்டி புதிய மின்சாரப் பயன்பாட்டுப் பொருட்களை உருவாக்குதல் ஆகியவை முக்கிய ஆராய்ச்சி பகுதிகளாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

விஐடி, சென்னை உயிரி–அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் கல்லூரியின் முதன்மையர் டாக்டர் ஜி.ஜெயராமன், அக்கல்லூரியின் கல்வி மற்றும் ஆராய்ச்சிச் செயல்பாடுகள் குறித்து விளக்கினர். மேலும், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளக்கூடிய கூட்டு ஆராய்ச்சி வாய்ப்புகளையும் எடுத்துரைத்தார். நிகழ்ச்சியின் தொடக்கத்தில், வாழை ஆராய்ச்சி மையத்தின் தொழில்நுட்ப மேலாண்மை மற்றும் வணிகமயமாக்கல் பிரிவின் ஒருங்கிணைப்பு அலுவலர் டாக்டர் கே.நாகேந்திரன் வரவேற்புரை வழங்கினார், இணை ஒருங்கிணைப்பு அலுவலர் டாக்டர் பிரமோத் ெ ஷலேக் நன்றியுரை வழங்கினார். விஐடி, சென்னை பேராசிரியர்கள் மற்றும் வாழை ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு மத்திய பட்டுவளர்ப்பு மரபணு வள மையத்தின் இயக்குநர் வருகை



கோயம்புத்தூர், அக்.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் மேட்டுப்பாளையத்தில் செயல்பட்டு வரும் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் (FCRI) பட்டுப் புழுவியல் துறையில், மத்திய பட்டு வாரியத்தின் (CSB) நிதியுதவியுடன் சிறந்த பழம் தரும் மல்பெரி மரபணு தொகுப்புகளை அடையாளம் காணுதல் என்ற தலைப்பில் கூட்டு ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஆராய்ச்சிப் பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக, மத்திய பட்டுவளர்ப்பு மரபணு வள மையத் தின் (CSGRC), இயக்குநர் முனைவர் N.K.பாட்டியா, திட்டத்தின் முதன்மை ஆய்வாளரும் விஞ்ஞானி C பிரிவைச் சேர்ந்தவருமான முனைவர் M.C.திரிவேணியுடன் இணைந்து, 22.10.26 அன்று வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தந்தார்.

வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் (வன வியல்) முனைவர் பு.பாலசுப்பிரமணியன் மற்றும் பட்டுப்புழுவியல் துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் K.A.முருகேஷ் ஆகியோர் இயக்குநரை வரவேற்றனர். தொடர்ந்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், இத்திட்டத்தின் முதன்மை ஆய்வாளரான முனைவர் P.பிரியதர்ஷினி, இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்த விரிவான விளக்கத்தை வழங்கினார். ஆராய்ச்சிப் பணிகளை மேலும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கான மதிப்புமிக்க தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் இயக்குநர் வழங்கினார். ஆய்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து, இயக்குநர் மல்பெரி பழத் தோட்டத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், மல்பெரி மரபணு வளத் தொகுப்பு, பட்டு ஆவண காப்பகம், பட்டுப்புழுவியல் ஆய்வகம், பட்டுப்புழு வளர்ப்புக் கூடம் மற்றும் மல்பெரி நாற்றங்கால் ஆகியவற்றையும் பார்வையிட்டார். இதன் மூலம், நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மல்பெரி

மரபணு வளப் பாதுகாப்பு, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டுவளர்ப்பு ஆராய்ச்சிப் பணிகள் குறித்து அவர் அறிந்து கொண்டார்.

வனவியல் சார்ந்த சூழல்களில் வன பட்டுப்புழு வளர்ப்பு ஆராய்ச்சியை விரிவுபடுத்துவதற்கும், மாணவர்களுக்குப் பட்டு வளர்ப்பின் பல்வேறு பிரிவுகள் குறித்த நடைமுறை அறிவை வழங்குவதற்கும் உள்ள வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, நிறுவனத்தில் வெப்பமண்டல டஸ்ஸார் பட்டுப்புழு வளர்ப்பைத் தொடங்குமாறு இயக்குநர் பரிந்துரைத்தார். இதன் மூலம், வன பட்டுப்புழு வளர்ப்பு குறித்த கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்துவதுடன், வனச் சூழலமைப்புகளில் வன அடிப்படையிலான பட்டு உற்பத்தியை ஒருங்கிணைப்பதற்கான வாய்ப்புகளையும் ஆராய முடியும் எனக் குறிப்பிட்டார்.

பட்டுப்புழுவியல் துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் K.A.முருகேஷ், துறையின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் குறித்து இயக்குநருக்கு விளக்கினார். இதனைத் தொடர்ந்து, வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் (வனவியல்) மற்றும் பட்டுப்புழுவியல் துறை ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் வன பட்டுப்புழு வளர்ப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. குறிப்பாக, ஈரி, மூகா மற்றும் டஸ்ஸார் பட்டுப் புழுக்களின் வாழ்க்கைச் சுழற்சிகள், அவற்றின் சூழலியல் தேவைகள், வனச் சூழலமைப்புகளுடனான தொடர்புகள் மற்றும் மூகா, டஸ்ஸார் பட்டுப்புழுக்களுக்கான விதைக்கூடு உற்பத்தி நுட்பங்கள் ஆகியவை குறித்து கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. இக்கலந்துரையாடல், வன பட்டுப்புழுக்களின் உயிரியல், மரபணு வளப் பாதுகாப்பு மற்றும் உற்பத்தி நுட்பங்கள் தொடர்பான தொழில்நுட்ப அறிவை ஆசிரியர்கள் மேலும் மேம்படுத்திக்கொள்ள உதவியாக அமைந்தது.

கல்வி நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, முனைவர் N.K.பாட்டியா, வெப்பமண்டல டஸ்ஸார் பட்டுப்புழு வளர்ப்பு, அந்துப்பூச்சிகளின் பல்லுயிர்ப் பெருக்கம், பட்டுப்புழுக்களின் இயற்கை எதிரிகள் மற்றும்



வன டஸ்ஸார் கூடுகளின் பன்முகத்தன்மை என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவை வழங்கினார். இச்சொற்பொழிவில், வன பட்டுப்புழுக்களின் சூழலியல் தொடர்புகள், உயிரியல் பன்முகத் தன்மை மற்றும் அறிவியல் அடிப்படையிலான வளர்ப்பு முறை களைப் புரிந்து கொள்வதன் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது.

இயக்குநரின் இவ்வருகையும் தொழில்நுட்பக் கலந்துரையாடல் களும் மல்பெரி பழ உற்பத்தி மற்றும் வன பட்டுப்புழு வளர்ப்பு தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்தவும், ஆராய்ச்சி ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், ஆசிரியர்களின் தொழில்நுட்ப அறிவை விரிவுபடுத்தவும், எதிர்கால ஆராய்ச்சி வாய்ப்புகளை அடையாளம் காணவும் பயனுள்ளதாக அமைந்தன.



# வேதிப்பூச்சிக் கொல்லிகளைக் குறைப்போம்!

# இயற்கை விவசாயத்தைப் பாதுகாப்போம்!!




விவசாயம் மனிதர்களின் அடிப்படைத் தேவையான உணவை வழங்கும் முக்கியத் தொழிலாகும். பயிர்களைப் பூச்சிகள் மற்றும் நோய்களிலிருந்து பாதுகாக்க வேதிப்பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை பயிர் இழப்பைக் குறைக்க உதவினாலும், தேவையற்ற மற்றும் அளவுக்கு அதிகமான பயன்பாடுமனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

### மனித ஆரோக்கியத்தில் பாதிப்புகள்

பூச்சிக்கொல்லிகளைப் பாதுகாப்பின்றிக் கையாளும் போது தலைவலி, தலைச்சுற்றல், குமட்டல், தோல் எரிச்சல் மற்றும் சுவாசப்பிரச்சினைகள் ஏற்படலாம். சில வேதிப்பொருட்களுக்கு நீண்டகாலமாக வெளிப்படுவது நரம்பு மண்டலம், ஹார்மோன் செயல்பாடு மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடும். எனவே, அவற்றைப் பயன்படுத்தும் போது பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.

### சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம்

வேதிப்பூச்சிக் கொல்லிகளின் முறையற்ற பயன்பாடு மண்ணில் வாழும் பயனுள்ள நுண்ணுயிரிகள், மண் புழுக்கள், தேனீக்கள் மற்றும் பிற நன்மை செய்யும் உயிரினங்களைப் பாதிக்கலாம். மழை நீர் வழியாக நீர் நிலைகளுக்குச் செல்லும் வேதிப்பொருட்கள் நீர்வாழ் உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடும். இதனால் மண்ணின் வளம், நீரின் தூய்மை மற்றும் இயற்கைச் சூழலின் சமநிலை பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

## இயற்கை முறைகளுக்கு முன்னுரிமை அளிப்போம்

வேதிப்பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைக்க வேப்பம் சார்ந்த பொருட்கள், உயிரியல் கட்டுப்பாடு, பயிர்ச்சுழற்சி, கலப்புப் பயிர், இனக்கவர்ச்சிப் பொறிகள் மற்றும் பூச்சி எதிர்ப்புத்திறன் கொண்ட பயிர் ரகங்கள் போன்ற முறைகளைப் பயன்படுத்தலாம். பயிர்களின் நிலையைத் தொடர்ந்து கண்காணித்து, பூச்சித் தாக்குதலின் அளவை மதிப்பிட்டு, தேவையான போது மட்டுமே கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்த நடைமுறையாகும்.

## ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

இயற்கை, உயிரியல் மற்றும் தேவையான வேதிக் கட்டுப்பாட்டு முறைகளை இணைத்துப் பயன்படுத்தும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM), பயிர்களைப் பாதுகாப்பதுடன் தேவையற்ற மருந்துத் தெளிப்பையும் குறைக்க உதவுகிறது. இதனால் விவசாயச் செலவைக் கட்டுப்படுத்தவும், பயனுள்ள உயிரினங்களைப் பாதுகாக்கவும் வாய்ப்புள்ளது.

பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்த வேண்டிய சூழலில், அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளைப் பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்த வேண்டும். உரிய பாதுகாப்பு உபகரணங்களை அணிதல், காற்றின் திசையைக் கவனித்தல், அறுவடைக்கு முன் குறிப்பிடப்பட்ட காத்திருப்புக் காலத்தைப் பின்பற்றுதல் மற்றும்மருந்துகளைப் பாதுகாப்பாகச் சேமித்தல் ஆகியவை அவசியம்.

காய்கறி மற்றும் பழங்களைச் சுத்தமான ஓடும் நீரில் நன்றாகக் கழுவுவதும் நல்ல உணவுப் பாதுகாப்பு நடைமுறையாகும். நிலையான விவசாயம் என்பது அதிக விளைச்சலைப் பெறுவது மட்டுமல்ல; மண்ணின் வளம், நீரின் தூய்மை, மனித ஆரோக்கியம் மற்றும் இயற்கைச் சமநிலையைப் பாதுகாப்பதும் ஆகும்.

விவசாயிகள், வேளாண்மைத் துறையினர், விற்பனையாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்பட்டால் தேவையற்ற வேதிப்பூச்சிக் கொல்லிப் பயன்பாட்டைக் குறைக்க முடியும்.

தேவையற்ற வேதிப் பயன்பாட்டைத் தவிர்ப்போம்;

தேவையான போது பாதுகாப்பாகப் பயன்படுத்துவோம்;

இயற்கை வழியில் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவோம்;

நலமான எதிர்காலத்தை உருவாக்குவோம்!

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். 82480 80922.***

# சிறப்பு பருவத்தில் நவம்பர் 16ஆம் தேதிக்குள் நெல் / மக்காச்சோளம் / பருத்தி பயிருக்கு காப்பீடு செய்ய வேளாண்மை இணை இயக்குநர் அழைப்பு

அரியலூர், அக்.23

எல்-நினோ தாக்கத்தால் பருவநிலை மாற்றத்தினை கருத்தில் கொண்டு பயிர் காப்பீடு செய்து கொள்ள அரியலூர் வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, வேளாண்மைத் துறையில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டம் எதிர்பாராமல் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் மகசூல் இழப்பிலிருந்து காத்திட மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்போடு செயல்படுத்தப் பட்டு வருகிறது. தற்பொழுது நிலவும் எல்-நினோ தாக்கத்தால் பருவமழை இயல்பைவிட குறைவாக இருக்க வாய்ப்புள்ளது, இதன் விளைவாக பயிர் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இதனை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் நடப்பு 2026-ம் ஆண்டு விவசாயிகள் நலன் கருதி நெல் மற்றும் மக்காச்சோளம் பயிருக்கு அக்ரி கல்ச்சுரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனம் மற்றும் வேளாண்மைத் துறை சிறப்பு பருவத்தில் பயிர் காப்பீடு செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து விவசாயி களும் இத்திட்டத்தின் பயனை பெற பொது சேவை மையம், தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொதுத் துறை வங்கிகள் மூலம் பயிர் காப்பீட்டு பிரீமியம் செலுத்தி பதிவு செய்த்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நடப்பு 2026-27ஆம் ஆண்டு சிறப்பு பருவத்தில் பருத்தி-II பயிருக்கு அக்டோபர்-30 ஆம் தேதி வரையிலும் நெல்-II, மக்காச்சோளம்-II பயிர்களுக்கு நவம்பர் 16 ஆம் தேதி வரையிலும் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். விவசாயிகள் 1 ஏக்கர் நெல்-II பயிருக்கு ரூ.589.50-ம், 1 ஏக்கர் மக்காச்சோளம்-II பயிருக்கு ரூ.39.29-ம், 1 ஏக்கர் பருத்தி-II பயிருக்கு ரூ.572-ம் பிரிமீயத் தொகையாக செலுத்தி தங்களது பயிருக்கு காப்பீடு செய்து கொள்ளலாம்.

இதற்காக விவசாயிகள் பொது சேவை மையத்தில் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பம், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து பிரீமியத் தொகையை செலுத்திய பின் அதற்கான

ரசீதை பெற்றுக் கொள்ளலாம். தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க சேவை மையங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலும் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். தற்போது சிறப்பு பருவ பயிர் சாகுபடி முழு வீச்சில் நடைபெற்று வரும் வேளையில் விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை காப்பீடு செய்வதற்கு கடைசி தேதி வரை காத்திருக்காமல் உடனடியாக காப்பீடு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் இது தொடர்பான விபரங்களுக்கு, விவசாயிகள் அருகிலுள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயனடையுமாறு அரியலூர் வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுக் கொண்டர்.

# விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் மாணவிகள்




திருச்சி, அக்.23

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பூனாம்பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறைஎழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக, மாணவிகள் விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பின் முக்கியத்துவம், வளர்ப்பு முறைகள் மற்றும் அதன் மூலம் கூடுதல் வருமானம் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுத்தினர். மேலும், காளான் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள், மானியங்கள் மற்றும் அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர் .

விவசாயிகளுக்கு சிப்பிக் காளான் வளர்ப்பு முறைகள் குறித்த செய்முறை விளக்கமும், காளான் வளர்ப்பிற்குத் தேவையான மூலப்பொருட்கள், வைக்கோல் பை தயாரித்தல், விதை இடுதல் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்தும் விளக்கமளித்த மாணவிகள் விவசாயிகளின் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்தினர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தேசிய நெடுஞ்சாலை நடுவே மருதாணி செடிகள் வளர்ப்பு - ஏன்?



ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளின் நடுவே உள்ள CENTRE MEDIAN-யில் பசுமையான ஆடு, மாடு தீண்டாத வறட்சியை தாங்க கூடிய செடிகள் வளர்க்கப்படுகின்றன. அரளி, காகித பூ போன்ற செடிகள் வரிசையில் தற்போது மருதாணி செடியும் வளர்க்கப்படுகிறது.

**மருதாணி வளர்க்க என்ன காரணம்?**

எப்போதும் பசுமையை மேம்படுத்தவும் சுற்றுப்புற சூழல் மாசடைவதை கட்டுப்படுத்தவும் சாலை ஓரங்கள் மற்றும் சாலைக்கு அருகேயுள்ள காலி இடங்களில் மூலிகை தாவரங்கள், மரங்கள் வளர்க்க திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் தான் மருதாணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக வாகனங்களால் ஏற்படும் காற்று மாசு மற்றும் ஒலி மாசுபாட்டைக் குறைக்கவும், மண் அரிமானத்தை தடுக்கவும், வெப்ப நிலையைக் கட்டுப்படுத்தவும் இந்த செடிகள் நடப்படுகின்றன. இதில் மருதாணி செடிகள் செழிப்பாகவும் பசுமை மாறாமல் இருக்கும் (EVER GREEN) என்பதால் நடப்படுகின்றன.

**ஆரோக்கியவன் திட்டம்**

பாரம்பரிய மருத்துவ தாவரங்கள், வகையை சேர்ந்த இந்த செடிகள் மத்திய அரசின் ஆரோக்கியவன் திட்டத்தின் கீழ் நடப்படுகின்றன.

**மருதாணி வளர்ப்பதால் என்ன பயன்?**

சாலையின் நடுவே இந்த செடிகள் வளர்க்கப்படுவதால் இவை அடர்த்தியான புதர்கள் போல் பரவி கிடக்கும். வாகன ஒளியை மறைத்து ஓட்டுநர்களுக்கு தெளிவான பார்வையை வழங்குகின்றன. இது விபத்துகளை (ACCIDENTS) பெருமளவு குறைகிறது. வாகனங்கள் வெளியிடும் கார்பன் டை ஆக்சைடு மற்றும் நச்சு புகையை இந்த செடிகள் உறிஞ்சிக் கொள்ளுகின்றன.

சாலையில் படியும் தூசியை (DUST) தடுத்து நிறுத்தி காற்றின் தரத்தை மேம்படுத்த இந்த செடிகள் உதவுகின்றன. இந்த செடிகளின் இலைகள் நெருக்கமாகவும் அடர்த்தியாகவும் வளர்வதால், மனிதர்களோ அல்லது ஆடு, மாடு, நாய்களோ திடீரென சாலையை கடப்பதை தடுக்கின்றன. இதனால் சாலைகளில் ஏற்படும் பெரும் விபத்துகள் தடுக்கப்படும். வண்டி ஓட்டுநர்களுக்கு மனதில் ஒரு ரம்மியமான சூழலில் பயணிக்கும் எண்ணம் உருவாகும் என்பதால் இந்த மருதாணி செடிகள் வளர்க்க படுகின்றன்.

இத்தனை விசயங்கள் இருக்கா? மருதாணி நட!!

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# அங்கக வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி




விழுப்புரம், அக்.23

விழுப்புரம் மாவட்டம், விக்ரவாண்டி வட்டார வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்டம் சார்பில், சே.புதூர் கிராமத்தில் அங்கக வேளாண்மை குறித்து ஒரு நாள் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் சங்கீதா வரவேற்புரையாற்றினார். வேளாண்மை உதவி இயக்குநர் கங்காகௌரி தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றினார். அப்போது, அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம், மண்வளத்தைப் பாதுகாத்தல், சாகுபடிச் செலவைக் குறைத்தல் மற்றும் தரமான விளை பொருட்களை உற்பத்தி செய்தல் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும், ஜீவாமிர்தம், கன ஜீவாமிர்தம், மீன் அமிலம், ஐந்திலை கரைசல், பஞ்சகவ்யா மற்றும் இஞ்சி, பூண்டு கரைசல் உள்ளிட்ட அங்கக வேளாண் இடுபொருட்களைத் தயாரிக்கும் முறைகள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. வேளாண் அலுவலர் கவிபிரியன், திரவ நுண்ணுயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் அன்பு, இளவரசன் மற்றும் இயற்கை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# விளைநிலம் காப்போம் இயக்க விழிப்புணர்வு பயிற்சி



திருச்சி, அக்.23

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம், வாளாடி கிராமத்தில் விளை நிலங்கள் காப்போம் இயக்கம் கேத் பச்சாவ் அபியான் திட்டத்தின் கீழ் வேளாண்மை துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம் ராஜசேகரன் தலைமையில் பயிற்சி நடைபெற்றது. இதில் விளைநிலம் காப்போம் இயக்கம் விழிப்புணர்வு முக்கியத்துவம், உயிர் உரங்கள் பயன்படுத்துதல், சம்பா சாகுபடி நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்துதல் பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட பயிர் காப்பீடு திட்ட உதவி இயக்குனர் புஷ்பா சிவகுமார் பேசுகையில் நடப்பு சம்பா பருவத்திற்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதின் அவசியம் மற்றும் எவ்வாறு பயிர் காப்பீடு செய்ய வேண்டும் என்று விவசாயிகளுக்கு விரிவாக விளக்கிக் கூறினார்.

லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சத்யபிரியா பேசுகையில் விவசாயிகள் மண் மாதிரி எடுத்தல் அவசியம், அதன் அடிப்படையில் மண்வள அடையாள அட்டை அடிப்படையில் தேவையான உரங்கள் பயன்படுத்துதல், சான்று பெற்ற விதைகள் பயன்படுத்துதல், திரவ உயிர் உரங்கள் பயன்படுத்துதல், பசுந்தாள் உர பயிர்கள் விதைப்பு செய்தல், நுண்ணூட்ட கலவை பயன்படுத்துதல், நுண்ணீர் பாசனம் செய்தல் , மாற்றுப் பயிர் தேர்வு செய்தல், இயற்கை விவசாயத்தில் பயன்படுத்தப்படும் இயற்கை இடுபொருள்கள், மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி, இன கவர்ச்சி பொறி, ஒட்டுண்ணி அட்டை கட்டுதல், தென்னையில் காண்டாமிருக வண்டு கட்டுப்படுத்தும் பொறி ஆகியவற்றை பற்றி விரிவாக விளக்கி கூறினார். மேலும் பாரத பிரதமரின் விவசாயிகள் கவுரவ நிதி திட்டத்தில் தொடர்ந்து பயன்பெற விவசாயிகள் சுயவிபரம் புதுப்பிக்க வேண்டும் என்றும் பிரதான் மந்திரி பாசல் பீம யோஜனா திட்டத்தின் கீழ் விவசாய பயிர் காப்பீடு செய்ய அறிவுரை வழங்கினார்.

அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிசெல்வன் பேசுகையில் விவசாயிகள் பயிற்சி, கண்டுணர்வு சுற்றுலா, செயல் விளக்கம் பயன்பெற வேளாண்மை விரிவாக்க மையம் முன்னுரிமை பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொண்டார்.

இதற்கான ஏற்பாட்டினை துணை வேளாண்மை அலுவலர் அய்யா சாமி, உதவி தொழில் நுட்ப மேலாளர் கார்த்திக், தமிழ்மணி, உதவி வேளாண்மை அலுவலர் கவிதா ஆகியோர் செய்து இருந்தனர்.

வாளாடியைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



# மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு காளான் வளர்ப்பு மற்றும் வீட்டுக் காய்கறித் தோட்டப் பயிற்சி!

## வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் ஏற்பாடு!!



சிவகங்கை, அக்.23

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர்களான ர.சா.சபீன்ராஜ், ர.அபுகுஹாஃபா, செ.நவின், ர.ச.சொக்கலிங்கம், ம.அருண் குமார் மற்றும் செ.ஸ்ரீ பிரபு ஆகியோர், கிராமப்புற வேளாண் அனுபவத்திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் பகுதியில் மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு சிப்பிக் காளான் வளர்ப்பு மற்றும் வீட்டுக்காய்கறித் தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினர்.

### காளான் வளர்ப்புப் பயிற்சி

இப்பயிற்சியில், சிப்பிக் காளான் வளர்ப்பின் முக்கியத்துவம், அதற்குத் தேவையான மூலப்பொருட்கள், வைக்கோலைப் பதப்படுத்தும் முறைகள், வளர்ப்புப் பைகள் தயாரித்தல், விதைக் காளான் இடுதல் மற்றும் வளர்ப்புப் பைகளை முறையாகப் பராமரித்தல் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. மேலும், காளான் வளர்ப்பிற்குத் தேவையான வெப்பநிலை, ஈரப்பதம், காற்றோட்டம் மற்றும் சுகாதார மேலாண் மையின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

காளானில் உள்ள புரதம், நார்ச்சத்து, வைட்டமின்கள் மற்றும் தாதுச்சத்துகள் குறித்தும் விளக்கப்பட்டது. குறைந்த இடத்தில், ஒப்பீட்டளவில் குறைந்த முதலீட்டில் காளான் வளர்ப்பை மேற்கொண்டு, அதனைச் சிறுதொழிலாக மாற்றி கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்புகள் எடுத்துரைக்கப்பட்டன. இதன் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுவினர் சுயதொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் குறித்தும் எடுத்துரைக்கப் பட்டது.

### வீட்டுக் காய்கறித் தோட்டப் பயிற்சி

வீட்டிலேயே காய்கறிகளைப் பயிரிட்டு, குடும்பத்திற்குத் தேவையான புதிய மற்றும் சத்தான காய்கறிகளைப் பெறும் நோக்கில் வீட்டுக்காய்கறித் தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. வீட்டின் பின்புறம், மொட்டை மாடி மற்றும் குறைந்த இடவசதி கொண்ட பகுதிகளில் காய்கறித் தோட்டம் அமைக்கும் முறைகள் விளக்கப்பட்டன.

தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கீரை வகைகள் மற்றும் கொடிவகைக் காய்கறிகளைப் பயிரிடுவதற்கான இடத்தேர்வு, மண் தயாரித்தல், விதைப்பு, நாற்று நடவு, நீர்ப்பாசனம் மற்றும் பயிர் பராமரிப்பு முறைகள் எடுத்துரைக்கப்பட்டன. மேலும், தொழு உரம் மற்றும் மண்புழு உரம் போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்தி மண் வளத்தை மேம்படுத்துவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, முறையான நீர் மேலாண்மை மற்றும் வீட்டில் கிடைக்கும் மட்கக்கூடிய கழிவுகளை உரமாக மாற்றிப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது. வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைப்பதன் மூலம் குடும்பச் செலவைக் குறைத்து, பாதுகாப்பான மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவைப் பெற முடியும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

### மகளிர் சுயதொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகாட்டுதல்

இப்பயிற்சியின் மூலம், மகளிர் சுயஉதவிக் குழுவினர் காளான் வளர்ப்பைச் சிறுதொழிலாக மேற்கொண்டு கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கும், வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைத்து குடும்பத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் தேவையான அடிப்படைத் தொழில்நுட்ப அறிவைப் பெற்றனர்.

மகளிரின் சுயதொழில் திறனை மேம்படுத்துதல், குடும்ப வருமானத்தை அதிகரித்தல், இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் நிலையான வேளாண்மை முறைகளை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங் களுடன் இப்பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நானோ விழிப்புணர்வுக் கருத்தரங்கம்



தர்மபுரி, அக்.23

தர்மபுரி மாவட்டம், தேோமலஅல்லி கிராமத்தில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இப்கோ சார்பில் நானோ விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், இப்கோ உதவி கள அலுவலர், இப்கோ நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி. மற்றும் சாகரிகா திரவ உரங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகள் மற்றும் அவற்றை இலைவழித் தெளிப்பு முறையில் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்து விவரித்தார். நானோ உரங்கள் மண்வளத்தை மேம்படுத்துதல், உரப் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் பயிர்களின் மகசூலை உயர்த்துதல் ஆகியவற்றில் முக்கியப் பங்கு வகிப்பதையும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிக்கும் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், துல்லியமாக உரங்களைத் தெளிப்பதற்கு கிசான் ட்ரோன் எவ்வாறு பயன்படுகிறது என்பதையும், எதிர்கால வேளாண்மையில் இத்தொழில்நுட்பம் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதையும் வலியுறுத்தினார்.

அத்துடன், இப்கோ சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டத்தின் கீழ், நானோ உரங்களை வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப் படுவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவரும், இனி தங்கள் வயல்களில் இப்கோ நானோ உரங்களைப் பயன்படுத்துவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தண்டலை கிராமத்தில்
# உர பயன்பாடு மற்றும் மேலாண்மை குறித்த பயிற்சி




அரியலூர், அக்.23

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சியானது உரப் பயன்பாடு மற்றும் மேலாண்மை என்கிற தலைப்பில் தண்டலை கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் மா.மகேந்திரவர்மன் தொடக்க உரையில் விவசாயிகள் அனைவரும் வேளாண்மைத் துறை மற்றும் சகோதர துறைகளின் திட்டங்களை பெற்று பயனடைய விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற வேண்டியது அவசியம் எனவும் விவசாயிகள் சாகுபடி செய்யும் போது மண் ஆய்வு செய்து பயிருக்கு தேவையான அளவு உரங்களை மட்டும் இட்டு சாகுபடி செலவை குறைத்து மண்வளத்தை பாதுகாத்து குறைந்த செலவில் அதிகமாக மகசூல் பெறும் தொழில்நுட்பங்களை விளக்கினார். அதனை தொடர்ந்து வேளாண்மை அலுவலர் (பயிர் காப்பீடு பிரிவு) கார்த்திக், உரிய காலங்களில் பயிர்களுக்கு பயிர் செய்வதன் அவசியத்தையும் அதன் பயன்பாடுகள் குறித்து எடுத்து கூறினார்.

மேலும் வேளாண்மை துணை இயக்குநர் வரதராஜன், தலைமை ஏற்று பேசுகையில், உரப்பயன்பாட்டில் விவசாயத்தில் பயிர்களின் ஆரோக்கிமான வளர்ச்சி மற்றும் அதிக மகசூலுக்கு அத்தியாவசியமான ஒன்று எனவும், உரங்களைச் சரியான முறையில் சரியான அளவில் பயன்படுத்துவதன் மூலமே மண்ணின் வளம் காக்கப்பட்டு பயிர்கள் முழுமையாக ஊட்டச்சத்தைப் பெறுகின்றன எனவும், உரங்களை விளை நிலங்களில் இடுதல் பற்றியும் விளக்கினார். இந்த பயிற்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஷ்குமார், உதவி வேளாண்மை அலுலவர் ராம்குமார் மற்றும் பாலாஜி ஆகியோர் செய்திருந்தனர்.

# நெல் பயிரில் வேளாண் சூழல் குறித்து விவசாயிகள் பயிற்சி



விருதுநகர், அக்.23

விருதுநகர் மாவட்டம், ராஜ பாளையம் வட்டாரம், கோவிலூர் கிராமத்தில் மோகன்தாஸ் சௌமியன் வேளாண்மை இணை இயக்குனர் தலைமையில் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப் பட்டது. அவர் விளைநிலங்களை காப்போம் என்ற அடிப்படையில் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற வேளாண்மை, பயிர் பல்வகைப்படுத்துதல், வறட்சியை தாங்கும் பயிர்கள், வேளாண் காடுகள் மற்றும் நுண்ணுயிர் பாசனம் ஆகிய வசதிகளை பயன்படுத்தி நமது நிலங்களை பாதுகாத்து நம் எதிர்கால தலைமுறைக்கு நல்லபடியில் விட்டு செல்வது விவசாயிகளின் கடமை என்பதை தெளிவாக எடுத்துரைத்தார்,

மேலும் வேளாண்மை உதவி இயக்குநர் கு.தனலட்சுமி, நெல்லில் வேளாண் சூழலில் நன்மை செய்யும் பூச்சிகள் தீமை செய்யும் பூச்சிகள் விகித சாரம் கண்டறிதல், அவ்வபோது வயல் ஆய்வு செய்தல் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேற்கொள்ள எடுத்துரைத்தார். மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ஜோதிமணி, கலந்து கொண்டு நெல் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை நெல் வயலில் வரப்பு பயிர் சாகுபடி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் வரிசை நடவு செய்வதால் அதிகமாக மகசூல் பெறுதல் ஆகிய தொழில்நுட்ப செய்திகளை கூறினார். தூண்டிக் காளை, மண் மாதிரி சேகரித்தல் உயிர் உரங்களின் பயன்கள் நுண்ணூட்ட உரங்களின் மூலம் அதிக மகசூல் பெறுவது குறித்து விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் சந்தியா, வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் வழங்கப்படும் இடுபொருட்களின் மானியங்களை எடுத்துக் கூறினார். துணை வேளாண்மை அலுவலர் ராமன், மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களை விளக்கினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் மேலாளர் நாராயணன் மற்றும் உதவி தொழில் மேலாளர் பத்மாவதி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# கெண்டியங்குப்பம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயிற்சி




விழுப்புரம், அக்.23

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், கெண்டியங்குப்பம் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் Dr.பாலசுப்பிர மணியனின் தலைமையில் வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் கெண்டியங்குப்பம் உழவர் ஆர்வலர் குழுவிற்கு திறன் மேம்பாட்டு பயிற்சி நடத்தப்பட்டது. இதில் வேளாண்மை உதவி இயக்குனர், குழுவில் பராமரிக்க வேண்டிய கோப்புகள் மற்றும் தீர்மானம் பதிவேடுகள் பற்றியும் விவசாய கருவிகளின் பயன்பாடுகள் பற்றியும் விளக்கமாக கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி, விவசாயிகளை வரவேற்றார்.

வேளாண்மை அலுவலர் விஜய், விளை நிலம் காப்போம் இயக்கத்தின் மூலம் ரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைப்பது அங்கக உரங்களை பயன்படுத்தி நஞ்சில்லா விவசாயம் செய்வது பற்றியும் விவசாயிகள் அடையாள எண் இதுவரை பதிவு செய்த விவசாயிகள் பதிவு செய்யும்படியும், களைக்கொல்லி தெளிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் கூறினார். மேலும் மண் மாதிரிகளில் எடுத்தல் மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளின் பயன்பாடு குறித்தும் பசுந்தால் உரம் விதைப்பதின் அவசியம் பற்றியும் மண் மாதிரி எடுத்து அதற்கு ஏற்றது போல் உரம் இடுதல் பற்றியும் விரிவாக கூறினார். மேலும் விவசாயிகளி சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சீனுவாசன், கலந்து கொண்டு வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மானியங்கள் விதை வினியோகம் விதை இருப்பு பற்றி விரிவாக கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் அருள்பாபு நன்றி கூற, ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி செய்திருந்தார்.

# குறுகிய காலத்தில் நெல் அறுவடை செய்து அதிக மகசூல் பெற ஆலோசனை

அரியலூர், அக்.23

அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டாரத்தில் சம்பா பருவத்தில் சுமார் 9000 எக்டரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் தற்போது 3000 எக்டர் பரப்பளவிற்கு மட்டுமே நாற்றங் கால் தயார் செய்யப்பட்டுள்ளது. சம்பா சாகுபடிக்கு நாற்று விட்டு நடவு செய்யும் முறையினை தவிர்த்து பாசன நீர் சிக்கனம் மற்றும்




ஆள் பற்றாக்குறையை கவனத்தில் கொண்டு நேரடி விதைப்பு முறையை பின்பற்ற கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் வடகிழக்கு பருவமழை தற்போது பெய்து வருகிறது. தற்போது நாற்று விட்டு நடவு செய்தால் இளம் நாற்றுக்கள் பாதிக்கப்படும். எனவே நாற்று விட்டு நடவு செய்யும் சாகுபடி முறையை தவிர்த்து தற்போது மழை நீரைக் கொண்டு உழுது புழுதி எடுத்த வயலில் 135 முதல் 140 நாட்கள் வயதுடைய மத்திய கால ரகங்களை அக்டோபர் மாத இறுதிக்குள் முளைக்குமாறு நேரடி நெல் விதைப்பு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. ADT-54, CO-52 மற்றும் TRY-3 ஆகிய மத்திய கால நெல் ரகங்கள் நேரடி நெல் விதைப்புக்கு ஏற்ற ரகங்களாகும். எனவே சம்பா பருவத்தில் நேரடி விதைப்பு மூலம் பயிர் செய்தால் குறுகிய காலத்தில் நெல் அறுவடை செய்து அதிக மகசூல் பெறலாம் என வேளாண்மைத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மண்வள மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



மதுரை, அக்.23

மதுரை மாவட்டம், மேலூர் வட்டாரம் சூரக்குண்டு கிராமத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் மண்வள மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது, இப்பயிற்சிக்கு இணைப்பேராசிரியர் தோட்டக்கலை வேளாண்மை அறிவியல் நிலையம், மதுரை ப.அருள் அரசு, மண் பரிசோதனை எடுப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கம் அளித்தார். மேலும் தோட்டக்கலை பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்கள் பற்றியும் அதை கட்டுப்படுத்தும் முறை பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். வேளாண்மை அலுவலர் சுரேஷ். மண் மாதிரி எடுக்கும் செயல் முறை விளக்கம் அளித்தார் . மேலும் பிஎம் கிசான் மற்றும் பயிர் காப்பீடு குறித்து விளக்கம் அளித்தார். துணை வேளாண்மை அலுவலர் மேலூர் பாஸ்கரன், நெல் விவசாயத்தில் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து தெளிவாக எடுத்துக் கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் காசிவிஸ்வநாதன், விவசாய அடையாள எண் பற்றியும் மின்னணு பயிர் கணக்கீடு குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராபின், விளைநிலம் காப்போம் இயக்கம் குறித்த விழிப்புணர்வு அளித்தார். மேலும் இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் மருது பாண்டித்துறை மற்றும் சிவரஞ்சனி செய்தனர்.

# விவசாயிகளுக்கு மண் பரிசோதனை மற்றும் இயற்கை உரங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி!



சிவகங்கை, அக்.23

காரைக்குடியில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், மேலூர் வட்டம், நாவினிப்பட்டி கிராம விவசாயிகளுக்கு மண் பரிசோதனை மற்றும் இயற்கை உரங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இக்கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவர்களான ச.க.தவமுகுந்தன், ஜெ.இதய எல்சன், அ.கோடீஸ்வர், க.பிரதீப் குமார், க.காமேஸ்வர் மற்றும் ம.சிவா ஆகியோர் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், மண் பரிசோதனை செய்வதன் அவசியம் மற்றும் அதன் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கும் நன்மைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், மண்ணின் தன்மையையும் பயிரின் தேவையையும் அறியாமல் தேவையற்ற உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து, ரசாயன உரங்களை அளவுக்கு அதிகமாகப் பயன் படுத்துவதால் மண்ணின் வளம் பாதிக்கப்படுவது மட்டுமின்றி, மனிதர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்தும் மாணவர்கள் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், மண்ணின் வளத்தைப் பாதுகாத்து நிலையான வேளாண்மையை மேம்படுத்துவதில் இயற்கை உரங்களின் பங்கு குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம், மண் பரிசோதனையின் அடிப் படையில் உரங்களைப் பயன்படுத்துதல், இயற்கை உரங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் மற்றும் மண்ணின் வளத்தைப் பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வு விவசாயி களிடையே ஏற்படுத்தப்பட்டது.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கத்திரிப்பள்ளி கிராமத்தில் மண்வள வேளாண்மை குறித்த விவசாயிகளுக்கு பயிற்சி

கிருஷ்ணகிரி, அக்.23

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி கத்திரிப்பள்ளி கிராமத்தில் வேப்பனப்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தொடங்கி வைத்து மண்வள மேலாண்மை மற்றும் வேளாண்மைத்துறையில் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தார். இந்த பயிற்சியின் போது, வேளாண்மை துணை இயக்குநர் (ஓய்வு) மனோகரன், இயற்கை பூச்சி விரட்டி முறைகள், பஞ்சாவ்யா, ஐந்திலை கரைசல், ஜுவாமிர்தம், மண்புழு உரம் தயாரித்தல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து விளக்கி கூறினார்.

கிருஷ்ணகிரி, நடமாடும் மண் பரிசோதனை நிலையம், வேளாண்மை அலுவலர், ஆரோ சோனியா பிரட், கலந்து கொண்டு மண் மாதிரி சேகரிக்கும் முறை மற்றும் அவற்றின் நன்மைகள், மண் ஆய்வு பரிந்துரையின் படி உரம் இடுதல், மண் மாதிரி எடுக்க வேண்டிய இடங்களில் புல், பூண்டுகளை கைகளால் பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். அந்த இடத்தில் ‘எ‘ வடிவத்தில் ஒரு குழி தோண்ட வேண்டும். இந்த குழியின் ஆழம் மேற்கண்டவாறு பயிருக்கு பயிர் மாறுபடும். ‘எ‘ வடிவக் குழியின் ஒரு பக்கத்தில் கீழிருந்து மேலாக ஒரு செ.மீ கணத்திற்கு மண்ணை சுரண்டி எடுக்க வேண்டும். இவ்வாறு 10 இடங்களில் குழிகள் தோண்டி மண் மாதிரி எடுக்க வேண்டும்.

இவ்வாறு சேகரித்த மண் மாதிரிகளை ஒரு காகித விரிப்பின் மேல் போட்டுஇ நன்றாக கலக்க வேண்டும். இதிலிருந்து அரைக்கிலோ மண்ணை, கால் பங்கீடு (ஙரயசவநசஷ்பெ) முறையில் பிரித்து எடுக்க வேண்டும். காகித விரிப்பில் மண்ணை சீராகப் பரப்பி போட்டு, அதன் மீது குறுக்கும் நெடுக்குமாக + வடிவத்தில் இரண்டு கோடுகள் கை விரலால் போட வேண்டும். அப்போது மண் நான்கு கால் 1/4 பாகங்களாகப் பிரிந்து காணப்படும். அதில் எதிர் எதிரே உள்ள இரண்டு கால் பாகங்களை நீக்கிவிட்டு மீதம் உள்ள இரண்டு கால் பாகங்களை மறுபடியும் ஒன்றாகக் கலந்து, மேற்கண்ட முறையில் மீண்டும் மண்ணை பிரித்தெடுக்க வேண்டும். இவ்வாறு பலமுறை செய்து அரைக்கிலோ மண்ணை எடுக்க வேண்டும் என்று விளக்கி கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன், உயிர் உர விதை நேர்த்தி செய்தல், தரமான வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும், மற்றும் சொட்டுநீர் பாசன திட்டத்தின் நன்மைகள் பற்றி தெளிவாக கூறினார். இந்த முகாமில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். கலந்துக்கொண்ட விவசாயிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாரதிராஜா மற்றும் பிரியா ஆகியோர் கலந்து கொண்டு அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் முகாமிற்கான ஏற்பாடுகள் செய்தனர்.

# தேமோர் கரைசல் குறித்து வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு செயல்விளக்கப் பயிற்சி

பெரம்பலூர், அக்.23



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிகுளம் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள், வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் அங்கமாக, மாணவிகள் செட்டிகுளம் கிராம விவசாயி களுக்கு தேமோர் கரைசல் தயாரிக்கும் முறை மற்றும் அதன் முக்கியத்துவங்கள் குறித்து செயல் விளக்கப் பயிற்சியளித்தனர். தேமோர் கரைசல் என்பது புளித்த மோர் மற்றும் தேங்காய்ப்பால் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் ஒரு இயற்கை வேளாண் கரைசலாகும். இது நெல், வாழை, மிளகாய், தக்காளி, கத்தரி, வெண்டை மற்றும் காய்கறிப் பயிர்கள் போன்றவற்றில் பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், மண்ணின் நுண்ணுயிர் செயல்பாடுகளை மேம்படுத்தவும் விவசாயத்தில் பயன்படுத்தப் படுகிறது. தேமோர் கரைசலை சரியான அளவில் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த செலவில் மண்வளம் மேம்படுகிறது, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது மற்றும் பயிரின் மகசூலும் அதிகரிக்கிறது. இப்பயிற்சியின் மூலம் தேமோர் கரைசலின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்பாடு குறித்த சந்தேகங்களை விவசாயிகள் மாணவிகளிடம் தெளிவாக அறிந்து கொண்டனர்.

# வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் பங்கேற்பில் பண்ணைப் பள்ளி



திருச்சி, அக்.23

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை வட்டாரத்திற்குட்பட்ட தேவனூர் கிராமத்தில், நிலக்கடலைப் பயிரில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த பண்ணைப் பள்ளி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் RAWE திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வரும் இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் பங்கேற்று, விவசாயிகளுக்குப் பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில், நிலக்கடலைப் பயிரைத் தாக்கும் முக்கியப் பூச்சிகள் மற்றும் நோய்கள், அவற்றின் பாதிப்புகள், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்க மளிக்கப்பட்டது. மேலும், பூச்சிகளைக் கண்காணித்து கட்டுப்படுத்த உதவும் இனக்கவர்ச்சிப் பொறி (Pheromone Trap) மற்றும் சூரிய ஒளிப்பொறி (Solar Light Trap) ஆகியவற்றின் செயல்பாடுகள், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்துச் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, நிலக்கடலைப் பயிரில் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல், களைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பயிரின் சீரான வளர்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவற்றில் மூடாக்கு (Mulching) முறையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் மகசூல் இழப்பைக் குறைக்கலாம் என அறிவுறுத்தப்பட்டது. பயிர் பாதுகாப்பு மருந்துகளைப் பரிந்துரைக்கப்பட்ட அளவில், உரிய பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி பயன்படுத்துவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, நிலையான மற்றும் இலாபகரமான வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில் இப்பண்ணைப் பள்ளி நிகழ்ச்சி நடைபெற்றது.